நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஜீன் 15-ஆம் நாள் திங்கள்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.191/2024**

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.450/2023 | |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | 1.பொன்செல்வம்,<br>த/பெ.செல்ம்,<br>106 ஆராய்ச்சிபட்டி நாடார் தெரு,<br>திருவில்லிபுத்தூர்.<br><br>2.பாண்டியராஜன்,<br>த/பெ.தெரியப்பன்,<br>122B/1, ஆராய்ச்சிபட்டி நாடார் தெரு,<br>திருவில்லிபுத்தூர்.<br><br>3.தங்கேஸ்வரன்,<br>த/பெ.தெரியப்பன்,<br>122B/1, ஆராய்ச்சிபட்டி நாடார் தெரு,<br>திருவில்லிபுத்தூர்.<br><br>4.பார்த்திபராஜ்,<br>த/பெ.ஜெயபிரகாஷ்,<br>6, ஆராய்ச்சிபட்டி நாடார் தெரு,<br>திருவில்லிபுத்தூர். | |
| சம்பவம் நடந்த நாள் | | 01.10.2023 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 02.10.2023 | |
| எதிரிகள் | | எதிரிகள் கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 1ம் எதிரி – 03.10.2023 | 06.10.2023 |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | | |
|---|---|---|---|
| | | 2 முதல் 4 எதிரிகள் –02.10.2023 கைது செய்யப்பட்டு அன்றே பிணையில் சென்றுள்ளார்கள். | - |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரிகள் தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 12.06.2026<br><br>இல்லை | |
| எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 29.02.2024 | |
| குற்றம் | | | |
| 1. சாட்டப்பட்டது | – | 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)–IPC ன் கீழ்,<br>2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323–ன் கீழ் | |
| 2. வனையப்பட்டது | – | 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)–IPC ன் கீழும்,<br>2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323–ன் கீழும் | |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் | |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 08.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 12.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. | |
| எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 15.06.2026 | |
| எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. | |

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி MBA., B.L., |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | – | 1வது எதிரிக்கு திரு.J.ஆஸ்பின்ஜேக் B.A., B.L.,<br><br>2 முதல் 4 எதிரிகளுக்கு திரு.J.பிரபாகரமூர்த்தி, B.A., B.L., |
| எதிரிகளின் கூற்று | – | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, 1வது எதிரி மீது இதச பிரிவுகள்.294(b), 323, 324, 506(2)–ன் கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கானது 14.02.2024ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 15.06.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.J.ஆஸ்பின்ஜேக் B.A., B.L., அவர்களும், 2 முதல் 4 எதிரிகளுக்கு திரு.J.பிரபாகரமூர்த்தி, B.A., B.L., அர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கு கடந்த 01.10.2023ம் தேதி இரவு சுமார் 11.15 மணியளவில் சாட்சி 1ம் அவரது உறவினரான சாட்சி 2ம் மங்காபுரம் கருப்பட்டி சொசைட்டி அருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துள்ளனர் என்றும், அப்போது அங்கு சென்ற எதிரிகள் நான்கு பேரும் சாட்சி 1யிடம் அவரது தெருவைச் சேர்ந்த சாட்சி 1க்கு பழக்கமான சுந்தர், பாகுபலி, திருப்பதி ஆகியோர்கள் பற்றி விசாரித்துள்ளனர் என்றும், அவர்களைப் பற்றி சாட்சி 1 தெரியாது என்று சொல்லவும் எதிரிகள் நான்கு பேரும் சாட்சி 1யைப் பார்த்து ஏண்டா புண்ட மகனே அவனுக எல்லாம் உன்கூட தான் சுத்திகிட்டு இருப்பாங்க கேட்டா தெரியாதுனு சொல்ற என்று மாறி மாறி அசிங்கமாக பேசி மிரட்டியுள்ளனர் என்றும், எதிரிகளைப் பார்த்து பயந்து ஓடிய சாட்சி 1யை எதிரிகள் நான்கு பேரும் சேர்ந்து கையால் அடித்தும், அதில் 1வது எதிரி கத்தியால் தாக்கி, சாட்சி 1க்கு தலை கழுத்து, மூக்கு, வலது பக்க கண்ணம், வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் சிறுகாயத்தை ஏற்படுத்தியும், அப்போது அங்கிருந்த சாட்சிகள் 2, 3, 4, 5 ஆகியோர்கள் எதிரிகளை சத்தம் போடவும் எதிரிகள் நான்கு பேரும் அங்கிருந்து போகும் போது 1வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியை காட்டி இன்னைக்கு நீ தப்பிச்சுட்ட என்னைக்கினாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்து சாட்சி 1க்கு உயிர்பயத்தை ஏற்படுத்திய குற்றத்திறக்காக 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)—ன் கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294, 323—ன் கீழும் தண்டிக்கத்தக்கவர் என்று திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளிகள் இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)—ன் கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது

இதச பிரிவுகள் 294, 323–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு, தாங்கள் குற்றவாளிகள் இல்லை என மறுத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.6 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–

4-(1) அ.சா.1 திரு.சொக்கமுத்து தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அவர்கள் தனது உறவினர்கள் என்றும், கடந்த 3 வருடத்திற்கு முன்னால் கருப்பட்டி சொசைட்டி அருகே சண்டை நடந்து கொண்டிருந்தது என்றும், தான் அருகில் சென்று பார்த்தபோது கூட்டத்தில் ஒருவர் தன்னை அடித்து விட்டார் என்றும், யார் அடித்தார்கள் என்று தான் சரியாக பார்க்கவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகார் மனுவிலுள்ள கையெழுத்து மட்டும் அசாஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.கணேசன் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முநிகா வைரமணி பணிமாறுதலில் சென்றுவிட்டபடியாலும் வழக்கின் காலதாமதத்தை கருத்தில் கொண்டும் அவர் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 02.10.2023 ம் தேதி காலை 07.15 மணிக்கு திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய முநிகா.2902 வைரமணி என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது சொக்கமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.450/2023 பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு


SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

செய்து அதன் அசலையும் புகார் மனுவையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். புகார் மனு அசாஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 என்றும், பின்னர் வழக்கு கோப்பை விசாணைக்காக தனது பார்வைக்கு வைத்தார் என்றும், பின்பு இவ்வழக்கினை தனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 02.10.2023 ம் தேதி காலை 08.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பாண்டியராஜ், வேல்முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பார்வை மகஜர் அசாஆ.4 என்றும், வரைபடம் அசாஆ.5 என்றும், பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முநிகா வைரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் சொக்கமுத்து, நடராஜன், முனீஸ்வரன், சிவக்கனி, ரவிக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மையென தெரிந்த படியால் எதிரிகளை கைது செய்ய வேண்டி தேடி வந்த நிலையில் எதிரிகள் 02.10.2023 அன்று 11.30 மணியளவில் திருவில்லிபுத்தூர் ஆத்துக்கடை சந்திப்பு அருகில் வைத்து 2, 3, 4 எதிரிகளை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 03.10.2023 அன்று 11.30 மணியளவில் 1ம் எதிரியை திருவில்லிபுத்தூர் சர்ச் பேருந்து நிறுத்தம் அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்னர் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் மீனுபிரியா என்பவரை விசாரித்தும் காயச்சான்று பெற்றும் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், விபத்து பதிவேடு அசாஆ.6 என்றும், பின்னர் அன்றைய தினமே எதிரிகள் மீது பிரிவுகள். 294(b), 323, 324, 506(2) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிகளுக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரிகளிடம்

குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரிகள் சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார்கள். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) தீர்வுக்குரிய பிரச்சனை :–

அரசு தரப்பால் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கடந்த 01.10.2023ம் தேதி இரவு சுமார் 11.15 மணியளவில் சாட்சி 1ம் அவரது உறவினரான சாட்சி 2ம் மங்காபுரம் கருப்பட்டி சொசைட்டி அருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துள்ளனர் என்றும், அப்போது அங்கு சென்ற எதிரிகள் நான்கு பேரும் சாட்சி 1யிடம் அவரது தெருவைச் சேர்ந்த சாட்சி 1க்கு பழக்கமான சுந்தர், பாகுபலி, திருப்பதி ஆகியோர்கள் பற்றி விசாரித்துள்ளனர் என்றும், அவர்களைப் பற்றி சாட்சி 1 தெரியாது என்று சொல்லவும் எதிரிகள் நான்கு பேரும் சாட்சி 1யைப் பார்த்து ஏண்டா புண்ட மகனே அவனுக எல்லாம் உன்கூட தான் சுத்திகிட்டு இருப்பாங்க கேட்டா தெரியாதுனு சொல்ற என்று மாறி மாறி அசிங்கமாக பேசி மிரட்டியுள்ளனர் என்றும், எதிரிகளைப் பார்த்து பயந்து ஓடிய சாட்சி 1யை எதிரிகள் நான்கு பேரும் சேர்ந்து கையால் அடித்தும், அதில் 1வது எதிரி கத்தியால் தாக்கி, சாட்சி 1க்கு தலை கழுத்து, மூக்கு, வலது பக்க கண்ணம், வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் சிறுகாயத்தை ஏற்படுத்தியும், அப்போது அங்கிருந்த சாட்சிகள் 2, 3, 4, 5 ஆகியோர்கள் எதிரிகளை சத்தம் போடவும் எதிரிகள் நான்கு பேரும் அங்கிருந்து போகும் போது 1வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியை காட்டி இன்னைக்கு நீ தப்பிச்சுட்ட என்னைக்கினாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் ஏற்படுத்தினார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின்

எதிரிகளை தெரியும் என்றும், அவர்கள் தனது உறவினர்கள் என்றும், கடந்த 3 வருடத்திற்கு முன்னால் கருப்பட்டி சொசைட்டி அருகே சண்டை நடந்து கொண்டிருந்தது என்றும், தான் அருகில் சென்று பார்த்தபோது கூட்டத்தில் ஒருவர் தன்னை அடித்து விட்டார் என்றும், யார் அடித்தார்கள் என்று தான் சரியாக பார்க்கவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை நிரூபிக்கும் வகையில் எந்தவித சாட்சியமும் இடம் பெறவில்லை. அ.சா.1யை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் புகார்தாரரான அ.சா.1 எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதாக கூறி குவிமுச பிரிவு 320–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது இந்நீதிமன்ற பரிசீலினைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

9. இவ்வழக்கில் புலன் விசாரணை செய்து, எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்த அசா.2ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் கூட்டத்தில் ஒருவர் தன்னை அடித்து விட்டதாகவும், யார் அடித்தார்கள் என்று தான் சரியாக பார்க்கவில்லை என்று அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகள் தான் குற்றவாளிகள் என முடிவு செய்ய சாட்சிகளும், சான்றாவணங்களும் போதுமானதாக இல்லை என்பதாலும், எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

10. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)–ன் கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294, 323–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

11. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

12. எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 15-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 – திரு.சொக்கமுத்து

அ.சா.2 – திரு.கணேசன்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அ.சா.ஆ.1 – புகார் மனுவிலுள்ள கையெழுத்து

அ.சா.ஆ.2 – புகார் மனு

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.5 – வரைபடம்

அ.சா.ஆ.6 – விபத்து பதிவேடு

**அரசு தரப்பு சான்றுப் பொருள்** – இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள். |